රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
பதிவாளர் நாயகம் திணைக்களம்
மொழிப்பெயர்ப்REGISTRAR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. RG/MBD/1/22

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
HEAD OFFICE

තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. 565

මබේ අංකය / உமது இல. / Your No.

234/A3, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை.
234/A3, Denzil Kobbakaduwa Mawatha, Battaramulla.

දිනය / திகதி / Date 2021.02. 15

அனைத்து மாவட்டப் பதிவாளர்கள்/ மேலதிக பதிவாளர் நாயகங்கள்,

## விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களினை ஆட்சேர்ப்பு முறையினை திருத்துதல்- வருடம் 2020

மேற்படி தலைப்பின் கீழ் எனது சம இலக்கம் மற்றும் 2020.10.15 ந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இலக்கம் 10/2020 ஆவது சுற்று நிருபம் மற்றும் அதன் இணைப்பு சம்பந்தமானது.

02. அதற்கிணங்க மேற்படி சுற்றுநிருபத்துடன் என்னால் தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட I வது இணைப்பான " விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் கையேடு III வது காண்டத்தில் I வது அத்தியாயத்தில்"

- இலக்கம் 18 (02) இலக்கம் (i) ""விண்ணப்பதாரரது வயது விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் வயது வருடங்கள் 30 இற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்" எனவும்
- இலக்கம் 18 (02) இலக்கம் (ii) க.பொ.த.(சா/த) மொழி விடயத்திற்கு ( பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்தியுடன் இரண்டு தடவைக்கு மேற்படாத தடவைகளில் குறைந்தது இரண்டு சிறப்பு சித்திகளுடன் ஆறு விடயங்களில் சித்திப்பெற்றிருத்தல் வேண்டும்" எனவும்

II வது இணைப்பான "விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் ஆட்சேர்த்தல்", "அ" அட்டவணையில்

- இலக்கம் 06. 1 இல் வயது என்னும் விடயம் ""விண்ணப்பதாரரது வயது விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் வயது வருடங்கள் 30 இற்கு குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்" எனவும்
- இலக்கம் 08 அடிப்படை கல்வித் தகைமைகளில் இலக்கம் I மற்றும் ii இல் "பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க.பொ.த (சா/த) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு (06) விடயங்களில் சித்திப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சம்மான பரீட்சையில் சித்திப்பெற்றிருத்தல் வேண்டும்"

எனவும் திருத்துவதாக இத்தால் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. அதற்கிணங்க தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள இணைப்பு I மற்றும் II இல் இந்த திருத்தத்தினை உட்புகுத்திக் கொள்ளுமாறும், பதவிகள் வெற்றிடத்திற்காக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தல் உட்பட உரிய விதம் ஏனைய அனைத்து ஆவணங்களிலும் அந்த திருத்தத்தினை உட்புகுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

දුරකථන අංකය / தொலைபேசி இல. / Telephone No. 2889488 2889489
ෆැක්ස් අංකය / தொலைநகல் / Fax No. 2889491
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website www.rgd.gov.lk
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail rgd@sltnet.lk rg@rgd.gov.lk

04. மேலும் இந்த திருத்தத்திற்கு உரிய வர்த்தமானி அறிவித்தலினை திருத்துவதற்காக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவதாக மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்/ டப்ளியூ.எம்.எம்.பி.வீரசேகர

பதிவாளர் நாயகம்

பிரதிகள்

| | | | |
|---|---|---|---|
| 01. | செயலாளர், தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு | - | தகவலுக்காக |
| 02. | தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்களுக்கும் | - | தகவலுக்காக |
| 03. | வலய பொறுப்பு அனைத்து உதவி பதிவாளர் நாயகங்களுக்கும் | - | தகவலுக்காக |
| 04. | அனைத்துக் காணிப்பதிவாளர்களுக்கும் | - | தகவலுக்காக |
| 05. | அனைத்து மேலதிக மாவட்டப் பதிவாளர்களுக்கும் (பி.செயலகம்) | - | தகவலுக்காக |

4 3 S

IT web